5th August 1966]

தோண்டப்படவில்லை. எனினும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஊற்றுக் கிணறுகள் திட்டத்தின் கீழ் தோண்டப்பட்ட ஊற்று நீர்க் கிணறுகளும், சி. முட்லூர் கிராமத்தில் ஆற்று நீர் இறைக்கும் திட்டத்தின் கீழ்த் தோண்டப்பட்ட ஒரு கிணறும், பொதுப் பாசனக் கிணறுகளின் நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றன.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : தலைவர் அவர்களே, பொதுக் கிணறு, இதற்கு முன்பு சில அங்கத்தினர்கள் கூட 'கம்யூனிட்டி வெல்' என்று அறிமுகப்படுத்தினார்கள், வெட்டுவது பெரிய விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்குமா? அல்லது சிறு விவசாயி களுக்குச் சாதகமாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : பொதுக் கிணறு வெட்டினால் அதைச் சுற்றி நிலங்கள் யார் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் சாதகம் அடைவார்கள்.

*Banana and Fruit Research Stations*

* 117 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) Whether there is any proposal to set up new Banana Research Stations and Fruit Research Stations in the State; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன்** : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Committee on Agricultural production*

* 118 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) the particulars of recommendations made by the Committee on Agricultural production under the Chairmanship of Sri S. Viswanathan, Member, Board of Revenue; and

(*b*) the decisions so far taken thereon?

**கனம் திரு. பூ. கக்கன்** : (அ) & (இ) வேளாண்மை உற்பத்திக் குழு 161 பரிவுரைகள் செய்துள்ளது. அக் குழுவின் அறிக்கை நகல்கள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கையில் 257—299 பக்கங்களில் இப்பரிவுரைகளின் சுருக்கம் ஒன்று தரப்பட்டுள்ளது. இதுவரை 29 பரிவுரைகளின் மேல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இது மேற்படி சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய பரிவுரைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. வை. சங்கரன்** : சார், அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள பரிவுரைகளில் முக்கியமானவற்றைக் குறிப்பிட முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன்** : அரசாங்கம் முக்கியமாக 29 பரிவுரைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவைகள்—

Sinking of 1,000 wells in Orthanad area of Thanjavur district under New Well Subsidy Scheme.

Enhancement of loan limit to Rs. 5,000 for all districts under New Well Subsidy Scheme.

Restriction of grant of loan to one well per ryot under New Well Subsidy Scheme.

Last date for receipt of applications for loans under New Well Subsidy Scheme to be fixed as 30th December of each financial year instead of 30th September.

Revision of period allowed for completion of well under New Well Subsidy Scheme from 18 to 30 months.

Commencement of recovery of loan under New Well Subsidy Scheme after one year from the completion of the well and period of recovery to be fixed as ten years for a loan of Rs. 3,000 and fifteen years for a loan of Rs. 5,000.

Stocking of detonators and explosives required for deepening of wells and blasting operation to be treated as departmental work, labour being provided by farmers.

இப்படி இன்னும் ஏற்றுக் கொண்டுள்ள பரிவுரைகள் இருக்கின்றன. மொத்தம் 29 பரிவுரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகள் பூராவையும் படிக்கவேண்டுமா ?

**கனம் சபாநாயகர்** : முக்கியமானவற்றைச் சொன்னால் போதும். ஒரு பெரிய ஸ்டேட்மென்ட்டையே படிக்க முடியுமா என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன்** : இப்படி விவசாயிகளுக்கு நன்மை ஏற்படக்கூடிய பல பரிவுரைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

*Procurement of paddy*

* 119. *Q.*—SRI S. MADHAVAN : SRI K. CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether the Government have taken steps to procure paddy from the agriculturists in Ramanathapuram district; and

(*b*) if so, the principles followed in fixing levy per acre?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The Collector of Ramanathapuram has adopted three broad classifications in the district namely—(i) Project area, (ii) Vaigai River fed area and (iii) other areas and has fixed different rates of levy for these three classifications subject to the following principles :—

" In respect of Srivilliputhur taluk and Rajapalayam taluk, no levy will be imposed on shavi cases and procurement will be made from holdings where yields are justifiable. "